# ஜனவரி 20,21 ஒருவரி நடப்பு நிகழ்வுகள்

- கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற அனைத்து பஞ்சாப் வீரருக்கும் அரசு வேலை வழங்குவதாக பஞ்சாப் அரசு அறிவிப்பு.
- திருச்சியில் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் கட்டமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன்.
- டெஹ்ராடூனில் இருந்து அமிர்தசரஸ்க்கு விமான சேவை துவக்கம்.
- சீன மக்கள்தொகை வளர்ச்சி 2018 ஆம் ஆண்டில் மெதுவாகத் தொடர்கிறது.
- நேபாளத்தின் மத்திய வங்கி இந்திய ரூபாய் நோட்டுக்களை பயன்படுத்த தடை.
- 2020 ஆம் ஆண்டுக்கான உலக கட்டிடக்கலை தலைநகரமாக பிரேசிலிய நகரம் ரியோ டி ஜெனிரோ யுனெஸ்கோவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்க உளவு செயற்கைகோள் கலி∴போர்னியாவிலிருந்து விண்வெளி சுற்றுப்பாதைக்கு ஏவப்பட்டது.
- உலக பொருளாதார மன்றம், WEF, வருடாந்திர சந்திப்பு டாவோஸில் தொடங்க உள்ளது.
- தீம் **'Globalization 4.0: Shaping a Global Architecture in the Age of the Fourth Industrial Revolution'**

- பெலிக்ஸ் ஷிஷேக்கேடி - **காங்கோவின் ஜனாதிபதி**
- ஆண்ட்ரி ராஜோ எலினா - **மடகாஸ்கரின் ஜனாதிபதி**
- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் உலகின் நம்பர் ஒன் வீராங்கனையான சிமோனா ஹாலெப்பை வீழ்த்தினார். ர∴பேல் நடால் கால் இறுதிபோட்டிக்கு முன்னேறினார்.
- டாட்டா ஸ்டீல் சதுரங்க போட்டியில் ஐந்து முறை உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் அஜர்பைஜானின் ஷகிரியார் மாமடயாரோவை வென்றார்.
- கென்யாவின் காஸ்மாஸ் லாகட் மற்றும் எத்தியோப்பியாவின் வொர்க்நேஷ் அலமு டாடா மும்பை மராத்தான் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்களின் பிரிவில் வென்றனர்.
- புனேயில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்தன. ஒட்டுமொத்த கோப்பையை மகாராஷ்டிரா கைப்பற்றியது.

- 1) மகாராஷ்டிரா 228 பதக்கம் 2) ஹரியானா 178 பதக்கம் 3) டெல்லி 136 பதக்கம்.
- சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பின் பெண்கள் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா வெற்றி பெற்றுள்ளார்.

**Join Us on FB :**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

For WhatsAPP Group - Click Here